# மானுட அவதரிப்பும் அகவாழ்க்கை உருவாக்கமும்

**சு. கோவிந்தராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

உலகில் இன்றும் யாராலும் விடையளிக்க இயலாதப் புதிர் மானுடயினத்தின் தோற்றம் பற்றியது. புவி தோன்றி பல நூற்றாண்டுகளுக்குப் பிறகே மற்ற உயிரினங்கள் தோன்றியிருக்க வேண்டும் எனக் கணிப்பின்படியே கூறப்படுகிறது. மானுடயினம் கடவுள் வழியாகப் படைக்கப்பட்டது என ஆன்மீகவாதிகளும், ஓரணுவுயிரியின் படிப்படியான வளர்ச்சி என அறிவியல் அறிஞர்களாலும் கூறப்படுகிறது. ஏதோ ஒருவகையில் தோன்றிய மனித இனம் விலங்குகளுக்கு ஒப்பாகவே வாழ்ந்து வந்துள்ளது. அவர்களது அடிப்படைத் தேவைகளும் உணர்வுகளும் சிந்தனையைத் தூண்டி சுயத்திற்கு வித்திட்டது. தேவையைச் சுயமாக நிறைவேற்றிய மனித இனத்திற்கு பாலியல் தேவை மட்டும் தனக்கு இணக்கமான ஒன்றை தேர்வு செய்ய விரும்பியது. அவற்றின் செயல்பாடுகளாலும், அவற்றின் மீதான மனிதாபிமான உணர்வுகளும் அகவாழ்விற்கு வழி வகுத்தது. அதன்படி அகவாழ்வு எவ்வகையில் அமைந்தது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**மானுட பரிணாம வணர்ச்சி**

பூமியில் பருவச் சூழல் ஏற்பட்டு இன்றையிலிருந்து சுமார் அறுபது கோடி ஆண்டுகட்கு முன்னர்தான் உயிரினங்கள் பரிணமித்தது எனக் கூறப்படுகிறது. அறுபது கோடி ஆண்டுகளுக்கு முன்பு அமீபா எனும் ஒட்டுண்ணியில் ஆரம்பமான உயிரினம் படிப்படியான வளர்ச்சியில் இடம்விட்டு இடம்பெயரும் நிகழ்வில் ஆறறிவுகொண்ட மானுடயினம் தோன்றுவதற்கு உதவியது. ஓரணுவுயிர்களிலிருந்து காலப்போக்கில் பாலூட்டிவகையான குரங்கு இனத்திற்கு வித்திட்டது. பிற பாலூட்டிகளைவிட மிகச்சிறந்த உறுப்பமைப்பும், சிந்தனை மனமும்கொண்ட குரங்கினத்தின் பரிணாம வளர்ச்சி மனிதன் தோற்றத்திற்கு வழி வகுத்தது. “மதங்கள் கூறுவதைப் போல எல்லா உயிரினங்களும் ஒரே சமயத்தில் கடவுளால் படைக்கப்பட்டிருக்க முடியாது”[1] குரங்குகளிலிருந்து மனிதன் பிறந்தான் என்று கூறுவது முற்றிலும் சரி எனக் கூறிவிட இயலாது. மனிதனைப் போன்றே காணப்படும் சிம்பன்ஸி, கொரில்லா இனக்குரங்குகளின் ஒட்டுமொத்தச் சேர்க்கைக் கூறுகளாகவே மனிதன் விளங்குகிறான். மூதாதையர் குரங்குகளைப் போன்றே கைகளாலும், கால்களாலும் நடந்து வாழ்ந்தனர். மனிதனின் மூதாதையர் குரங்குகள் அல்ல குரங்கைப் போன்று வாழ்ந்த விலங்குகளே என்று உறுதிபடக் கூறலாம். பூமியில் வாழும் பாலூட்டியின் உயர் இனமாக மனிதன் இடம் பெறுகின்றான். “முதனிலைப் பாலூட்டிகளில் மனிதனைத் தனியாக இனம் பிரித்துக் காட்டுவது மூளையும் நிமிர்நடையும்”[2]

**தேவைகளும், உணர்வுகளும்**

மரத்தில் வானரங்கள் போன்று வாழ்ந்த ஆதிகால மனிதஇனம் தரை வாழ்வை மேற்கொண்டு பின்னங் கால்களால் நடக்கத் தொடங்கினான். அதன்படி பூமியில் மிகமிக முன்னேற்றம் அடைந்து அறிவு வளர்ச்சி பெற்ற விலங்காக திரிந்தான். மனிதஇனம் மனிதனின் முதல் தேவைகள் பசி, உறக்கம், இருப்பிடம். பசிக்கும்போது கண்ணில்பட்டவைகளை எடுத்து உண்டு பழகியவர்கள் பின் சுவையறிந்து உண்டு இளைப்பாறினார்கள். உணவின் பற்றாக்குறை காரணமாக இடம் பெயர்வு மேற்கொண்டனர். போகும் இடங்களில் கிடைத்தனவற்றை உண்டு வாழ்ந்தார்கள். உணவுத் தேடலில் மனிதனுக்கு ஆபத்தாகவும் போட்டியாகவும் விளங்கியது மற்ற உயிரினங்கள். அவற்றிடம் இருந்து தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், பாதுகாத்துக்கொள்ளவும் இருப்பிடங்களை நாடினர். அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அதற்கான உழைப்பையும் அறிந்துகொண்டனர். ஆக்கமும் கூட்டு வாழ்வும் சமூக அமைப்பை உருவாக்கின. உழைப்பும் முயற்சியும் வானர இனத்தைச் சேர்ந்த மனிதனை இனம் பிரித்துக் காட்டின.

பசி தேவைகளை அறிந்த மானுடஇனம் பாலினத் தேவைகள் அறிந்துகொள்வதற்கு நாட்கள் நீண்டன. விலங்குகள் போன்றே பாலினச் செயல்களில் வறைமுறைகள் அற்றிருந்தனர். பாலின உணர்வைக் கட்டுப்படுத்தத் தெரியாத மனித இனம் ஒவ்வாத காம செயல்களில் ஈடுபட்டனர் (கைக்கிளை, பெருந்திணை). பாலினச் சேர்கையின் உந்துதல் காரணமாகத் தனக்கு நிரந்தரமான ஒரு சேர்க்கையைத் தேர்வு செய்துகொண்டு வாழ்ந்தனர். அவற்றின் தவறுகள் பெருகப்பெருக தனது பட்டறிவின் மேன்மையால் அவற்றை ஒழுங்குப்படுத்திக்கொண்டனர்.

**வரையறுக்கப்பட்ட வாழ்க்கை**

தகுதியுடையவை மட்டும் தழைத்து வாழ இயலும் என்ற புரிதல் மனிதனிடம் தோன்றியது. உலகம் பெரும்பாலும் வகுத்தல் திருத்தல் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே இயங்கிவருகிறது. முப்பது இலட்சம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய ஹோமோ ஹாபிலஸ் என்ற மனித இனம் உணவுப் பகிர்ந்துண்ணுதல், கைவினைத்திறன், பேச்சுத்திறன், நீண்டகால இளமைப் பருவம், பாலினச் சேர்க்கையில் மாறுதல் இந்த இனத்தில் காணப்பட்டதாகக் கூறுப்படுகிறது. இவைபோன்ற செயல்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் மூளையும் வளர்ச்சி பெற்றிருந்தது.

மற்றொரு இனமான கைப்பாடு, கொன்ற விலங்குகளைத் தங்கள் இருப்பிடத்திற்கு எடுத்துச் சென்று பெண்கள், குழந்தைகள், முதியவர்களுக்குக் கொடுத்து பின்பு அவற்றைப் பகிர்ந்துண்ணும் பழக்கம் ஏற்பட்டது. ஆண்கள் விலங்குகளை வேட்டையாட செல்ல பெண்கள் கனிகள், கிழங்குகளைச் சேகரித்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேர்த்து அமர்ந்து உண்ணும் வாழ்வை மேற்கொண்டனர். பாலின முறையில் இனப்பெருக்கம் செய்ய பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையே முரண்பாடுகள் நிலவி வந்துள்ளன.

மற்ற உயிரினங்கள் இனச்சேர்க்கை காலத்தில் மட்டும் ஆண்இனத்தை தன் அருகில் நெருங்கவிடும். அவற்றில் வேறுபட்ட மனித இனம் ஆண்டு முழுவதும் எப்பொழுது வேண்டுமானாலும் இனச்சேர்க்கை புரியும்படி தகுதியைப் பெண்கள் பெற்றிருந்தனர். இந்த உணர்வு ஆண் பெண் இடையே நெருக்கத்தையும் நிரந்தரமான உறவையும் தோற்றுவித்தன. மகப்பேறு காலத்தில் ஏற்பட்ட உதிரப்போக்கும் அவற்றின் நுகர்வினால் ஏற்படும் விலங்குகளின் தாக்குதலும் தனக்கு நெருக்கமானவர்களை முதலில் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது. மனிதனிடம் அன்புணர்வுகொண்ட மனமாற்றத்தை ஏற்படுத்தியது. தாய் சேய் உடனான பாலூட்டல் உறவை வலுப்படுத்தியது. “மற்ற பாலூட்டிகளை விட முதனிலை பாலூட்டிகளிடையே தாய்-சேய் உறவு நீண்ட நாள் நீடித்திருக்கும், இளமைப் பருவமும் நீண்ட நாள் தொடரும், இந்தத் தனித்தன்மைகள் மனித இனத்தினிடையே மிகத் தெளிவாகப் புலப்படும்”[3]

உழைப்பு பங்கீடும் தாய்க்குக் குழந்தையின் மேல் அதிக கவனம் செலுத்த உதவின. எல்லாவற்றையும் கற்றுத்தெரிந்து கொள்ள நீடித்த இளமைப் பருவம் உதவி புரிந்தது. இந்த நெருக்கமான உறவு முறை குடும்பம், பாசம், முதலான பிணைப்புகள் அகவாழ்வின் தொடக்கநிலையாக அமைந்தன. நாளடைவில் இவை இனக்குழுச் சார்ந்த பெரிய சமூகமாக உருமாறத் தொடங்கியது.

### பாலின வேறுபாடும் அகவாழ்க்கையும்

ஆண் பெண் என்ற வேறுபாட்டை அறியத்தொடங்கிய மனிதன், உடல் அமைப்பின் தன்மையும் புரிந்துகொண்டான். ஆண்கள் வலுவுடனும், பெண்கள் வலுமை சற்று குறைவு என்பதை உணர்ந்தான். தீங்குதரும் உயிரினங்களிடம் இருந்து அஞ்சாமையும், நோக்கி எதிர் நிற்பதும் ஆடவரின் இயல்பாகக் காணப்பட்டன. இவை மனைவாழ் பெண்டிரை ஆதரிப்பதாகவும், அவர்கள் அச்சமின்றி வாழ்வை மேற்கொள்ளவும் தூண்டலாய் இருந்தன. வலிய தொழில்கள் செய்வதற்கேற்ப உடலமைப்பும் உள்ளத்திண்மையும் ஆடவர் பெற்றனர். வினைத்திறத்தில் வெற்றி பெறுவது ஆடவர் தன்மையை மேலும் வளர்ப்பதாக இருந்தது. இவை நாளடைவில் புறவினைகளை நிகழ்த்துவது ஆடவர்களுக்கு உரியவையாக ஏற்கப்பட்டது. இடையூறுகளையெல்லாம் எதிர்த்துநின்று தங்கள் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு ஆண் மக்களுக்கே உரியதாகும் என வகுக்கப்பட்டது.

"வினையே ஆடவர்க் குயிரே"[4]

"பெருமையும் உரனும் ஆடவர் பண்புகளாம்"[5]

அஞ்சி ஒதுங்கும் தன்மை பெண்பாலருக்கு உரியதாக இருந்தது. பயம், அன்பு, அமைதி ஏற்றவாறான உடலமைப்பு பெண்டிர்க்கே உரிய அழகாகப் பார்க்கப்பட்டது. மகளிரது உடல் வலிமை வேட்டையாடும் தொழிலுக்கு ஏற்றதன்று. ஆடவர் வேட்டைக்குச் செல்ல பெண்டிர் மனையின் அருகில் இருக்கும் காய் கனிகள், கிழங்குகளைச் சேகரித்தல் என மனைவாழ்விற்குரிய எளிய செயல்களை மேற்கொண்டனர் பிள்ளைகள் சுற்றத்தாரைப் பேணி பாதுகாக்கும் பணிகளையும் மேற்கொண்டனர்.

"அச்சமும் நாணமும் மடமும் நிச்சயம்
பெண்பார்க் குரிய"[6]

பெண்டிரின் பாலின செயல்பாடுகளும், வினைகளும், மகப்பேறும் அகவாழ்வை மேலும் அழகுப்படுத்தி வலுத்தூக்கி நின்றன.

### அகவாழ்வு சித்தரிப்பு

புதிய கற்கால வாழ்வை வாழக் தொடங்கிய மனிதர்கள் அறிவு வளர்ச்சி காரணமாக தங்கள் தேவைகளை ஓரளவு தானே நிறைவேற்றி கொண்டனர். விலங்குகளும், இயற்கை சீற்றங்களும் முதல் அச்சுறுத்தலாக இருந்தன. அவற்றிலிருந்து காத்துக்கொள்ள குகைகளிலும், பாறை இடுக்குகளிலும் (குறிஞ்சி) மலைப்பகுதிகளிலும் வாழ்ந்தனர். பருவ சூழலும், உணவு தேவைகளின் பற்றாக்குறையும் இனக்குழுவாக பிரிந்து மலையடிவாரத்தில் உள்ள காடுகளை (முல்லை) நோக்கி குடிபெயர்ந்தனர். அங்கு தங்களுக்கு தேவையான குடியிருப்புகளை நிரந்தரமாக மரத்தினால் அமைத்துக்கொண்டனர். விலங்குகளைப் பழக்கவும், கால்நடைகளை வளர்க்கவும் கற்கத்தொடங்கினர். கால்நடைகளை மேய்ச்சல் தொழிலை மேற்கொண்டனர். அங்கிருந்தவர்கள் மற்றொரு இனக்குழுவாகப் பிரிந்து நீரும், நிலமும் (மருதம்) உள்ள சமவெளிப்பகுதிக்கு குடியேறினர். சமவெளிப்பகுதியில் மனிதனின் பெரும்பாலான தேவைகள் நிறைவேறியன. எல்லா வளமும் இப்பகுதியில் கிடைத்தன. பருவ நிலை மாறுபாடு, நீர் பற்றாக்குறையை ஏற்படுத்த மற்றொரு இனக்குழு அங்கிருந்து பிரிந்து நீர் நிறைந்த கடல் (நெய்தல்) பகுதியை சென்று அடைந்தனர். அங்கு கிடைத்த மீன் மற்றும் கடல்சார் வளங்களை பயன்படுத்திக்கொண்டனர். பருவம் முழுவதும் வளங்கள் கிடைக்க அக்குழு நிரந்தரமாக அங்கு தங்கினர். இனக்குழுவாக பிரிந்து வாழ ஆரம்பித்தவர்கள் தேவைகள் பற்றாக்குறையின்போது பிரிந்துசென்ற மற்ற இனக்குழுவை நாடினர். தேன் கொடுத்து, கனி பெறுவது, கனி கொடுத்து திணை பெறுவது, திணை கொடுத்து உப்பு பெறுவது எனப் பண்டமாற்றுமுறை தொடர ஆரம்பித்தது. பண்டமாற்று முறை நாளடைவில் களவு மண முறைக்குப் பாதை அமைத்தது. பொருட்களைக் கொண்டுவரும் ஆடவர் வேற்று திணை வாழ் மகளிரை விரும்பி ஏற்க ஆரம்பித்தனர். இனக்குழுக்களுக்கிடையே எவ்வித முரண்பாடின்றி வாய்வழி மூலம் மணமுறை செய்து ை

களவு திருமண முறை நாளடைவில் மக்களின் உறவு கூட்டத்தைப் பெருகியது. மண முறையும் தாய் வழிச் சமூகத்தில் அதிகம் ஏற்பட ஆரம்பித்தது. தாய் வழி மணம் முக்கிய பங்காற்றியதால் பெண்களுக்கு மதிப்பு வழங்கப்பட்டது. அவற்றின்வழி மகளிரைத் தெய்வமாக வழிபடும் முறையும்

தோன்றியது. “கி.மு. 7000 ஆண்டுகளுக்கு முன் சிறுத்தை மேல் அமர்ந்த நிலையில் பெண்ணின் செதுக்குருவம், பெண் தெய்வ வழிபாட்டைக் குறிக்கிறது”[7]

தானியங்கள் அவற்றின் வழி வரும் பொருட்கள் (செல்வம்) லட்சுமியாகப் பார்க்கப்பட்டன. வாழும் திணையினைப் பூமித்தாயாக வழிப்பட்டனர். இதனால் பெண் பிள்ளையைப் போற்றி வளர்த்தனர்.

“குன்னறக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல் வளைக் குறுமகள்”[8]

பெண்டிரை போற்றி வளர்த்த சமூகம் பாலின வழியில் அவர்கள் ஏமாற்றப்படுவதை உணர்ந்து கட்டுப்பாட்டுடன் கூடிய சடங்குகள்வழி கற்பு வாழ்வை (திருமணம்) ஏற்கவேண்டும் என நெறிகளும் முன்வைக்கப்பட்டன. இத்தகைய செயல்பாடுகள் நாளடைவில் மனிதனின் தவறுகளைக் குறைத்து அகவாழ்வுக்குரிய சட்டங்களைப் பண்பாட்டின் படியில் ஏற்றியது.

**முடிவுரை**

உயிரினங்களின் வளர்ச்சியில் ஆறறிவுகொண்ட மனிதஇனம் தனது வாழ்வை நெறிப்படுத்தி செம்மைப் படுத்திக் கொண்டது. பால்வழியே அகவாழ்வினுள் நுழைந்தவர்கள் அவர்களுக்கான உடைமைகளை நிர்ணயித்ததுடன் உறவுகளையும் தீர்மானித்துக் கொண்டனர். தேவைகள் பொருட்டு இடப்பெயர்வை மேற்கொண்டு தனக்கான வாழ்வியல் செயல்முறைகளையும் அமைத்துக் கொண்டனர் என்பது இக்கட்டுரை வழி அறிய முற்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. பல்துறை அறிவியல், ப. 29.
2. மனிதன், ப. 27.
3. மேலது., ப. 47.
4. குறுந்தொகை, பா. 135.
5. தொல்காப்பியம்.களவியல், நூ. 1044.
6. மேலது., நூ. 1045.
7. மனிதன், ப. 155.
8. ஐங்குறுநூறு, பா. 257.

**பார்வை நூல்கள்**

1. அனைவாரி ஆனந்தன், 1989, பல்துறை அறிவியல், மாணியம் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி
2. கிறிஸ்டோபர் ஜெயகரன், 1991, மூதாதையரைத் தேடி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
3. கா. சுப்பிரமணியன், 1982, சங்ககாலச் சமுதாயம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. வெள்ளைவாரணார், சங்ககாலத் தமிழ் மக்கள் தோற்றுவாய்.
5. என். ஸ்ரீநிவாஸன், 1991, மனிதன், வித்யா பப்ளிகேஷன்ஸ், சென்னை.